# 2017, 2018 ஆம் ஆண்டுகளுக்கான அதிபர் அறிக்கை

பெருமதிப்பிற்குரிய பிரதம விருந்தினர் அவர்களே !
எங்கள் அன்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய சிறப்பு விருந்தினர் அவர்களே,
விழாவைச் சிறப்பிக்க வந்திருக்கும் மதிப்பிற்குரிய அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே,
வலிகாமம் கல்வி வலயத்தின் மதிப்பார்ந்த கல்விப்புல அதிகாரிகளே,
சண்டிலிப்பாய் பிரதேச கோட்டக்கல்வி அதிகாரி அவர்களே,
அயற்பாடசாலைகளின் மதிப்பார்ந்த அதிபர்களே, ஆசிரியர்களே,
பற்றுடன் பயணிக்கும் பழையமாணவர்களே,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்களே,
அன்பான பெற்றோர்களே, பெரியோர்களே, , நலன்விரும்பிகளே,
எமது கல்லூரியின் ஆசிரிய பெருந்தகைகளே,
கல்விசாரா அலுவலர்களே, அன்பார்ந்த மாணவச் செல்வங்களே,
அனைவருக்கும் அன்பு கனிந்த வணக்கத்தைத் தெரிவித்து, எமது கல்லூரியின் பரிசளிப்பு விழாவை சிறப்பிக்க வருகை தந்த உங்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன். எமது கல்லூரியின் பெருமையையும், தனித்துவத்தையும் கட்டிக்காத்து அர்ப்பணிப்புடன் செயற்பட்ட முன்னைநாள் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் சேவையைப் பாராட்டுவதோடு, "கடின உழைப்பு எதையும் வெல்லும்" என்ற கல்லூரியின் விருது வாக்கை நினைவிற் கொண்டு நாங்கள் மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், இணைப்பாட விதான செயற்பாடுகளை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வோம் என மகிழ்ச்சியுடன் தெரிவித்து 2017, 2018ஆம் ஆண்டிற்கான அதிபர் அறிக்கையை சமர்ப்பிப்பதில் பேருவகையடைகின்றேன்.

எமது அன்பான அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் எம் அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் உயர்திரு.இ.இளங்கோவன் அவர்களே! தாங்கள் எமது அழைப்பை மகிழ்வுடன் ஏற்று விழாவில் கலந்து கொண்டமை எமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் இவ்விழாவிற்கு உயர்சிறப்பையும் அளிக்கின்றது.
தங்கள் கரங்களால் பரிசில்களையும் வாழ்த்துக்களையும் பெறும் எமது மாணவர்கள் கொடுத்து வைத்தவர்கள் என்றால் அது சாலப் பொருத்தமானதே.

மேலும் எமது கல்லூரியின் அழைப்பை இன்முகத்துடன் ஏற்று விழாவிற்கு பெருமை சேர்த்த எமது கல்லூரியின் பழைய மாணவனான அருட்தந்தை செலஸ்ரின் சூசைதாசன் குரூஸ் அ.ம.தி அவர்களே! தங்கள் வரவு எமக்கு மனநிறைவை அளிக்கின்றது.
யா/இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியானது பழம்பெரும் வரலாறு படைத்த கல்லூரி என்பதும் யுத்தகால இடப்பெயர்வின் பின்னரான மீள்குடியேற்ற காலத்தில் இருந்து தனது வரலாற்றைப் பதித்து கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாட்டிலும் இலங்கையிலே தனக்கெனத் தனியான ஓர் இடத்தை தக்கவைப்பதில் முனைப்புடன் செயலாற்றி வருகின்றது என்பதும் யாவரும் அறிந்ததே. அவ்வகையிலே அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்ற எமது கல்லூரியின் ஆளணி தொடர்பான தகவலை முன்வைத்து 2017, 2018 ஆம் ஆண்டுகளுக்கான அதிபர் அறிக்கையினை சமர்ப்பிக்கின்றேன்.

**ஆசிரிய ஆளணியினர் 2017/2018**

| ஆண்டு | மொத்த ஆசிரியர்கள் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 2017 | 58 | 28 | 30 |
| 2018 | 58 | 27 | 31 |

**ஆசிரிய ஆளணி பற்றாக்குறை - 2019**

| பாடம் | தரம் | தேவையான ஆளணி | உள்ளது | பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| விஞ்ஞானம் | 6-11 | 3 | 1 | 2 |
| விஞ்ஞானம்(ஆங்கில மொழி மூலம்) | 6-11 | 2 | - | 2 |
| கணிதம் | 6-11 | 3 | 1 | 2 |

கல்லூரியின் கற்றல் கற்பித்தல், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஒன்றித்து வினைத்திறனுடன் பணியாற்றும் எமது ஆசிரிய ஆளணி 2017ஆம், 2018ஆம் ஆண்டுகளில் 52 ஆகவும் கல்லூரி நிர்வாகத்துடன் இணைந்து பலவித கல்லூரி பணியிலும் ஈடுபடும் கல்விசாரா அலுவலர்களின் ஆளணி 2017-2018ஆம் ஆண்டுகளில் 4 ஆகவும் கொண்டு எமது கல்லூரியின் கல்விப் பயணம் தொடர்ந்தது.

## கல்விசாரா அலுவலர்கள் விபரம்

| 2017/2018 | பற்றாக்குறை 2019 |
|---|---|
| நூலக உதவியாளர் - 1 | அலுவலகப் பணியாளர் - 1 |
| சமையல் தொழிலாளி. - 1 | நூலக உதவியாளர் - 1 |
| ஆய்வு கூட உதவியாளர் - 1 | பகல் நேர காவலாளி - 1 |
| இரவுக் காவலாளி - 1 | தோட்டத் தொழிலாளி - 1 |

## மாணவர் விபரம்

| தரம் | 2017 மாணவர் தொகை | 2018 மாணவர் தொகை |
|---|---|---|
| 6 -9 | 289 | 266 |
| 10 – 11 | 195 | 208 |
| 12 - 13 | 141 | 101 |
| **மொத்தம்** | **625** | **575** |

## இடமாற்றமும், ஓய்வும்

எமது கல்லூரியில் கடமையாற்றிய

- திரு.A.ஜேம்ஸ் மேசன் பிரதி அதிபர் (SLPS III) அவர்கள் அதிபராகவும்.
- திரு.A.அதிசயராஜா ஆசிரியர் அவர்கள் இலங்கை கல்வியாளர் (SLTES) சேவைக்கும்
- திருமதி கவிதா சந்திரகுமார் ஆசிரியர் அவர்கள் (SLEAS-III) தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளார்கள்.
- திரு.M.D.டனிஸ்ரன் விஜயகுமார் அவர்கள் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் வடமாகாண பயிற்சி நிலையத்தின் பயிற்றுவிப்பாளராக இணைப்புப் பெற்றுச் சென்றுள்ளார்.
- அலுவலகப் பணியாளர்களாகவும் தொண்டாசிரியர்களாகவும் பணியாற்றிய திருமதி.டயானா பொலின் சாசினி ஜெயக்குமார்,
  திருமதி.நாகலக்ஸ்மி ஜெயச்சந்திரன் ஆகியோர் ஆசிரிய நியமனம் பெற்றுச் சென்றுள்ளார்கள்.
- திருமதி U.காஞ்சனமாலா உதவி நூலகராக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார்.

## எமது பாடசாலையில் அர்பணிப்புடன் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்

| | பெயர் | சேவையாற்றிய வருடங்கள்/ மாதங்கள் ஏறத்தாழ |
|---|---|---|
| 1. | திரு.S.பிரதீபன் | 20 வருடங்கள் |
| 2. | திருமதி. S. அருள்நேசன் | 8 வருடங்கள் |
| 3. | திரு.S.சற்குணேஸ்வரன் | 4 வருடங்கள் |
| 4. | திருமதி.Y.அன்பரசி | 2 வருடங்கள் |
| 5. | திரு.K.கண்ணதாசன் (SLPS III) | 7 மாதங்கள் |
| 6. | திருமதி.D.S.பிரபாலினி(தற்காலிக இணைப்பு) | 1 வருடம் |
| 7. | திருமதி.T.லக்சனா(தற்காலிக இணைப்பு) | 6 மாதங்கள் |

## சேவையிலிருந்து ஓய்வு பெறுவோர்

எமது கல்லூரியில் கணித பாட ஆசானாக 7 வருடங்கள் சேவையை வழங்கி எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த திரு.S.B.பியன்வெனு ஆசிரியர் அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். **இவர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவிக்கின்றேன்.**

## கல்லூரியும் விடுதிச்சாலையும்

யாழ் மாவட்டத்தில் விடுதிச் சாலையுடன் இயங்கிவருகின்ற பாடசாலைகளில் எமது கல்லூரியும் ஒன்றாகும். யாழ் மறைமாவட்ட ஆயர் அவர்களின் நிர்வாகத்திற்கு உட்பட்டதாக இன்றும் இயங்கி வருகின்ற புனித வளனார் விடுதியும் புதுப்பொலிவு பெற்று எமது கல்லூரிக்கு வளம் சேர்ப்பதாகவுள்ளது. இங்கு 2017ல் 83 மாணவர்களும் 2018ல் 97 மாணவர்களும் தங்கியிருந்து கல்வியைத் தொடருகின்றார்கள். எமது கல்லூரியின் முன்னைநாள் அதிபர் அருட்தந்தை.A.J.யேசுதாஸ் அடிகளாரின் பெரும் முயற்சியின் பயனாக கனடா பழைய மாணவர்களின் அனுசரணையுடன் விடுதிச்சாலைக்கான மண்டபமும் தங்குமிட அறைகளுமாக "Canada House" கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடம் அமைப்பதற்கு காரணமாக இருந்த கனடா பழைய மாணவர்களை நன்றியுடன் நினைவு கூருகின்றேன். இம் மாணவர்கள் கல்லூரியின் பல்வேறு சாதனைகளிலும் பக்கபலமாக இருந்து செயற்படுவது போற்றுதற்குரியது. விடுதிச்சாலை மாணவர்களின் கல்வி, விளையாட்டு, ஒழுக்கம் என்பவற்றை விருத்தி செய்து பேணுவதில் மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்ற இவ்விடுதிச்சாலையின் இயக்குனரான அருட்தந்தை R.ஜினோல்ற்றன் விஜின்ரஸ் அடிகளார் அவர்களுக்கு எனது பாராட்டுடன் கூடிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பாராட்டு

கல்லூரியின் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் மற்றும் ஏனைய செயற்பாடுகளிலும் பக்கபலமாக செயலாற்றுகின்ற உப முதல்வர் அருட்தந்தை. T.அன்சன் றெஜிக்குமார் அ.ம.தி அடிகளாருக்கும் கனிஷ்ட இடைநிலைப் பாடசாலை இணைப்பாளர் அருட்தந்தை.R.ஜினோல்ரன் விஜின்ரஸ் அடிகளாருக்கும் கல்லூரியின் முன்னேற்றத்திற்கான பல்வேறு செயற்பாடுகளிலும் வினைத்திறனுடன் ஈடுபடுகின்ற பிரதி அதிபர்களான திருமதி. N. C. M. சத்தியவாணி (கல்வி, அபிவிருத்தி), திரு. ஆ. பிரபாகரன் (நிதி, நிர்வாகம்) அவர்களுக்கும், உதவி அதிபர் (திட்டமிடல்) திரு.S.சேரரூபன் அவர்களுக்கும் எனது மனமர்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் அவர்களின் நலன்களில் அக்கறையுடன் செயற்பட்ட பகுதித் தலைவர்களான (2017ம் ஆண்டு) திரு.P.விஜயகுமார் (தரம் 6-7) அருட்சகோதரி அனற் வலன்ரீனா யோவேல் (தரம் 8-9), திரு.S.P.பியன்வெனு (தரம் 10-11), திரு.S.பிரதீபன் (தரம் 12-13) ஆகியோருக்கும், (2018ம் ஆண்டு) திரு.D.யூட் நிர்மலன் (தரம் 6-7), அருட்சகோதரி அனற் வலன்ரீனா யோவேல் (தரம் 8-9), திரு.K.செல்வரட்ணம் (தரம் 10-11), திரு.S.பிரதீபன் (தரம் 12-13) ஆகியோருக்கும், அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஏனைய ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும், **நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்**.

மேலும் இவர்களின் வழிப்படுத்தலில் 2017இல் செல்வன் A.யூட்நிக்சனைத் தலைவராகக் கொண்டும் 2018இல் செல்வன். T.கில்லறி அன்ரனைனஸைத் தலைவராகக் கொண்டும் இயங்கிய மாணவ தலைவர்களின் சேவையும் பாராட்டுதற்குரியது

## கல்வி

1. க.பொ.த. (சாதாரணம்) சித்திவீதம்

| பாடங்கள் | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| சைவசமயம் | 90 % | 91% | 62% | 73% |
| கிறிஸ்தவம் | 100 % | 100% | 98% | 100% |
| தமிழ் | 91% | 77 % | 82% | 94% |
| ஆங்கிலம் | 28% | 23% | 23% | 33% |
| விஞ்ஞானம் | 67% | 43% | 49% | 44% |
| வரலாறு | 58 % | 65% | 63% | 73% |
| கணிதம் | 76% | 64% | 66% | 64% |
| வர்த்தகமும் கணக்கீடும் | 89% | 100% | 90% | 94% |
| குடியுரிமை | 74% | 36% | 44% | 48% |
| புவியியல் | 91% | 97% | 79% | 88% |
| சித்திரம் | 32% | 79% | 85% | 64% |
| சங்கீதம் | 100% | 100% | 100% | 100% |
| நாடகமும் அரங்கியலும் | 98 % | 100% | 100% | 100% |
| தகவல்தொடர்பாடல் தொழில் நுட்பம் | 100% | 100% | 100% | 100% |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 93 % | 83% | 93% | 92% |

2. க.பொ.த (உயர்தரம்) சித்திவீதம்

| பாடங்கள் | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| பௌதிகவியல் | 25% | 25 % | - | 100% |
| இரசாயனவியல் | 25% | 100 % | 100% | 100% |
| உயிரியல் | - | 100 % | - | 100% |
| பொருளியல் | 100% | 79 % | - | 80% |
| வணிகக் கல்வி | 100% | 86 % | 94% | 100% |
| கணக்கீடு | 100% | 55 % | 74% | 69% |
| புவியியல் | 33% | 67 % | 57% | 100% |
| கிறிஸ்தவம் | 100% | 100 % | 82% | 100% |
| இந்து நாகரிகம் | 100% | 100 % | - | 86% |
| சித்திரம் | 100% | 100 % | - | - |
| நாடகமும் அரங்கியலும் | 100% | 100% | 93% | 100% |
| தமிழ் | 88% | 82 % | - | 100% |
| அரசியல்விஞ்ஞானம் | 100% | 67 % | 43% | 78 |
| வரலாறு | 100% | - | - | - |
| தகவல் தொடர்பாடல் | | - | 67% | 67% |

## பாடசாலையின் அதியுயர் சித்திகள்

| | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| க.பொ.த (சா/த) | 9A | 8A,B | 7A,B,C | 9A |
| க.பொ.த (உ/த) | கலை 2A,B<br>வர்த்தகம் 2A,B<br>கணிதம் A, 2B | கலை 2A,C<br>வர்த்தகம் 2A,B | கலை 2A,C<br>வர்த்தகம் 2A,B | கலை 2A,B<br>வர்த்தகம் A, 2B<br>கணிதம் A, 2B |

## பல்கலைக்கழக அனுமதி

2017ம் ஆண்டு கலைப் பிரிவில் கல்வி பயின்று R.கவியரசன், A.கிசோ பஸ்ரின், S.யூட்சுமன் ஆகியோரும்
2017 வர்த்தகப் பிரிவில் கல்வி பயின்று N.நிலோஜன், K.றாம்குமார், B.கீர்த்தன சர்மா, A.திவாகர் ஆகியோரும்
2017 கணித/விஞ்ஞான பிரிவில் கல்வி பயின்று N.அருண் அவர்களும்
2018 கலைப் பிரிவில் கல்வி பயின்று A.அதுஜன், A.அலெக்சன், G.அன்ரனிராஜ், M. ஸ்ரீபன், J. அன்ரனி டிலைக்சன் ஆகியோரும்
2018 வர்த்தகப் பிரிவில் கல்வி பயின்று V.கஜினாத் , V. எமில்ராஜ் ஆகியோரும்
2018 கணித/விஞ்ஞான பிரிவில் கல்வி பயின்று G.ஜெனோசன் அவர்களும் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றிருந்தார்கள்.

## பல்கலைக்கழக அனுமதியினை எதிர்பார்ப்போர்

2018 கலைப் பிரிவில் **A.**றூபகன், **P.**றெமிசியஸ் ஆகியோரும் கணித/விஞ்ஞான பிரிவில் J.புனிதராஜ், A.லிதர்சன் ஆகியோரும் பல்கலைக்கழக அனுமதியினை எதிர்பார்க்கின்றார்கள்.

## தேசிய கல்வியற் கல்லூரி அனுமதி 2017,2018

K.கஜேந்திரன் அவர்கள் தேசிய கல்வியற் கல்லூரி அனுமதி பெற்றுள்ளார்.

**மேற்படி பல்கலைக்கழகம், தேசிய கல்வியியல் கல்லூரி ஆகியவற்றிற்கு தெரிவு செய்யப்பட்ட எமது மாணவச் செல்வங்களையும், வழிகாட்டிய ஆசிரியப் பெருந்தகைகளளயும் பாராட்டி வாழ்த்துகிறேன்.**

## எமது கல்லூரியில் செயற்படுகின்ற மன்றங்களும் போட்டிகளும்

| மன்றங்கள் | பொறுப்பாசிரியர்கள் | வழிநடத்திய ஆசிரியர்கள் |
|---|---|---|
| தமிழ் இலக்கிய மன்றம் | திருமதி.A.ஜெயானந்தன் | *செல்வி.S.சிவமலர் *திரு.M.சகிந்தன்<br>*திருமதி.L.சுதர்சன் |
| ஆங்கில இலக்கிய மன்றம் | திரு.P.ஜெயக்குமார் | *அருட்தந்தை.R.ஜினோல்ரன் விஜின்ரஸ்<br>*திரு.M.சந்துரு<br>*அருட்சகோதரி வலன்ரீனா |
| கணித, விஞ்ஞான மன்றம் | • திருமதி.N.பிரணவரூபன்<br>• திருமதி.J.மீரா<br>• திரு.A.அதிசயராஜா<br>• செல்வி.R.பவித்திரா | *திரு.S.பிரதீபன் *செல்வி.N.சாமினி<br>*திரு.D.யூட்நிர்மலன் *செல்வி.S.பானுசா<br>*திருமதி.T.சத்தியகுமார்<br>*திருமதி.A.இந்துஜா *செல்வி.J.ஜெஸ்லின்<br>*திருமதி.S.அம்பாலிகை *திரு.K.மணிமாறன் |

| | | |
|---|---|---|
| கவின் கலை மன்றம் | • திருமதி.I.உதயன்<br>• திரு.P.டார்சன் | *திரு.P.விஜயகுமார் *திரு.G.திரோணர்<br>*திரு.V.வித்தியாபரன் |
| கிறிஸ்தவ மன்றம் | • திரு.N.ரவீந்திரன்<br>• திருமதி.T.சத்தியவதனி | *அருட்சகோதரி வலன்ரீனா<br>*திரு.J.அனுஸ்டதாஸ் |
| சமூக விஞ்ஞான மன்றம் | • திருமதி.V.அல்போன்ஸ்<br>• திருமதி.A.D.J.நைல்ஸ் | *திரு.S.சிவகுமார் *திரு.T.சிவகுமார்<br>*திருமதி.T.சிறிசண்முகா<br>*திருமதி.D.சர்மிளா *திரு.M.ஐங்கரன்<br>*திருமதி.R.பிரியந்தினி *திருமதி.J.சரீனா<br>*திருமதி.R.துறாயினி |
| வர்த்தக மன்றம் | திருமதி.S.சிவகௌரி | *திரு.K.செல்வரட்ணம்<br>*திருமதி.I.யூட்ஜெயகாந்தன்<br>*திரு.V.உதயகுமார் *திருமதி.S.கலைவாணி |
| இந்து மன்றம் | திருமதி.V.சிவகுமாரன் | திரு.S.சிவலோகநாதன் |
| உயர்தர மன்றம் | திருமதி.S.சிவகௌரி | - |
| பான்ட் வாத்தியக்குழு | செல்வி.J.ஜெஸ்லின் | - |
| சாரணர் குழு | திரு.S.சிவகுமார் | - |
| சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் | திரு.T.சிவகுமார் | - |
| தேசிய மாணவர் படையணி | திரு.S.சிவகுமார் | - |

ஆகிய மன்றங்கள் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன.இவை மாணவர்கள் தங்களின் உள்ளார்ந்த ஆற்றல்கள், திறமைகளை விருத்தி செய்வதற்கும் சிறந்த ஆளுமையை வெளிப்படுத்துவதற்கு பெரிதும் உதவுகின்றன.

## போட்டிகள்

- கணித விஞ்ஞானப் போட்டி
- தமிழ் மொழித்தினப் போட்டி
- ஆங்கில தினப் போட்டி
- வணிக தினப் போட்டி
- சிங்கள மொழித்தினப் போட்டி
- சமூகவிஞ்ஞானப் போட்டி
- சைவநெறித் தேர்வு
- மறைக் கல்வித் தேர்வு

என்பவற்றில் மாணவர்கள் கோட்ட, வலய மட்டங்களில் பங்குபற்றி பரிசில்கள் பெற்றனர்.

## ஆங்கில மொழித்தினப் போட்டிகள்

1) **தனிநிகழ்சிகள் (தனிநடிப்பு, கதை சொல்லுதல், கவிதை, கட்டுரை, உறுப்பெழுத்து)**

| ஆண்டு | 2017 | 2018 |
|---|---|---|
| கோட்டம் | 8 | 6 |
| வலயம் | 5 | 2 |
| மாகாணம் | 1 | - |

2) குழுநிகழ்சிகள் (நாடகம், குழுப்பாடல்)

| ஆண்டு | 2017 | 2018 |
|---|---|---|
| கோட்டம் | 6 | 7 |
| வலயம் | 2 | 1 |
| மாகாணம் | 2 | 1 |

2017 இல் தரம் 12ஐச் சேர்ந்த மாணவன் அ.நிசாகர் மாகாணமட்டத்தில் தனி நடிப்பில் முதலிடத்தையும், சிரேஸ்ட பிரிவினருக்காக நடாத்தப்பட்ட நாடகப் போட்டியில் சிரேஸ்ட பிரிவு மாணவர்கள் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.
இம்மாணவர்களைத் தயார்ப்படுத்தி கல்லூரியின் முதன்மை நிலையைப் பேணிய உப அதிபர் அருட்தந்தை A.அன்சன் றெஜிக்குமார் அ.ம.தி, கனிஷ்ட இடைநிலை இணைப்பாளர் அருட்தந்தை R.ஜினோல்ரன் விஜின்ரஸ், அருட்சகோதரி வலன்ரீனா ஜோவேல் ஆசிரியர்களான திரு.P.ஜெயக்குமார், திரு.M.சந்துரு ஆகியோருக்கு **எனது உளம் நிறைந்த நன்றியும் பாராட்டும்** உரித்தாகுக.

### தமிழ்த்தினப்போட்டி (வாசிப்பு, பாடல், பேச்சு)

| ஆண்டு | 2017 | 2018 |
|---|---|---|
| கோட்டம் | 5 | 4 |
| வலயம் | 1 | 2 |

இம்மாணவர்களைத் தயார்ப்படுத்தி கல்லூரியின் முதன்மைநிலையைப் பேணிய தமிழ் மொழி பாட ஆசிரியர்களான திருமதி.A.ஜெயானந்தன், செல்வி.S.சிவமலர், திருமதி.S.சுதர்சன் ஆகியோருக்கு **எனது உளம் நிறைந்த நன்றியும் பாராட்டும்** உரித்தாகுக.

### கணித விஞ்ஞானப் போட்டி (Olympiad)

2017ல் வடமாகாண மட்டத்தில் இடம்பெற்ற விபரணப் படமாக்கல் போட்டியில் எமது கல்லூரி மாணவர்கள் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர். இவர்களைத் தயார்ப்படுத்திய ஆசிரியர்களான திருமதி.N.பிரணவரூன், திருமதி.T.சத்தியவதனி ஆகியோருக்கு எனது **நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.**
யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான சங்கத்தினால் நடாத்தப்பட்ட புத்தாக்கற் போட்டியில் மாணவன் செல்வன் S.திசேந்தன் இரண்டாம் இடத்தினையும் 2018ல் உயர்தர மாணவர்களுக்கான மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட விஞ்ஞான வினாடி வினாப் போட்டியில் எமது கல்லூரி மாணவர்கள் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.
இவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களான திருமதி.N.பிரணவரூன், திருமதி.T.சத்தியகுமார், செல்வி.இ.பவித்திரா ஆகியோருக்கு எனது **நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

### சங்கீதப் போட்டி

வட இலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்பட்ட ''தனி இசை'' போட்டியில் மாணவன் அன்ரனி விதுசன் மாகாண மட்டத்தில் முதலிடத்தினைப் பெற்றுக் கொண்டார். இவ் வெற்றியைப் பெற்றுக்கொள்ள வழிப்படுத்திய ஆசிரியை திருமதி.I.உதயன் அவர்களுக்கு எனது **நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

### மறைக்கல்வித் தேர்வு

2018ம் ஆண்டில் மறைக்கல்வித் தேர்வில் செல்வன் A.பொஸ்வின் 94 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இம்மாணவனைத் தயார்ப்படுத்திய ஆசிரியை திருமதி.T.சத்தியவதனி அவர்களுக்கு எனது **நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

**தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்.**

தேசிய ரீதியில் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வினாடி வினாப் போட்டியில் செல்வன் R.மதுசன்,செல்வன் T.கில்லறி அன்ரனைனஸ், செல்வன் A.நிசாகர் ஆகியோர் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் தேசிய மட்ட மென்பொருள் போட்டியில் **"SLIIT Merit Award"** எமது படசாலைக்கு கிடைக்கப்பெற்றது. இம்மாணவர்களைத் தயார்ப்படுத்திய ஆசிரியர் திரு.V.வித்தியாபரன் அவர்களுக்கு எனது **நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

**பாடசாலைத் தோட்டம்.**

மாணவர்களுக்கு சூழல் நேய மனப்பான்மையை ஏற்படுத்துவதையும் ஊக்குவிப்பதையும் நோக்காகக் கொண்டு கல்லூரி வளாகத்தில் மூலிகைத் தோட்டம், மரக்கறித் தோட்டம் என்பன உருவாக்கப்பட்டு மாணவர்களாலும் பொறுப்பாசிரியர்களான திருமதி.N.பிரணவரூபன், திருமதி.T.சத்தியவதனி, செல்வி.S.பானுசா ஆகியோரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கழிவு முகாமைத்துவ திட்டத்தின்கீழ் சேகரிக்கப்படும் உக்கக்கூடிய கழிவுகள் யாவும் கூட்டுப்பசளையாக்கப்பட்டு தோட்டத்தை வளமூட்டப் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் விளையாட்டில் ஈடுபடும் மாணவர்களுக்கான சத்துணவு வழங்கும் திட்டத்திற்கும் பாடசாலைத் தோட்டம் உதவுகிறது. மாணவர்கள் இரசாயன கலப்பற்ற மூலிகை செடிகளின் பலனைப் பற்றி அறிந்து கொள்ளவும் தமது வீட்டுச் சூழலில் அவற்றை உருவாக்கும் மனப்பாங்கை ஏற்படுத்துவதற்கும் மூலிகைத் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

2018ம் ஆண்டில் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான சங்கத்தினால் நடாத்தப்பட்ட பாடசாலைத் தோட்டத்திற்கான போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டதும் பெருமைக்குரிய விடயமாகும்.

**நிலைபேறான அபிவிருத்தித் திட்டம்**

உலகளாவிய ரீதியில் நிலைபெறுதகு அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் அமையம் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை முன்வைத்து தனது பணியை இலங்கையில் முன்னெடுத்தது. அந்த வகையில் இரு பாடசாலைகள் மாவட்ட ரீதியில் தெரிவாகின. சிறந்த ஆரோக்கியம், சமாதானமும் அமைதியும், பங்குடமை போன்ற இலக்குகளின் மூலம் மாணவர்களிற்கும் சமூகத்திற்கும் தரமான கல்வியை வழங்குதல் எனும் எமது கல்லூரியின் பிரேரணை"பேண்தகு பாடசாலை" எனும் செயற்றிட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்டது. அதற்கமைவாக சிறந்ததாகத் தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதி செயலகத்தால் இத்திட்டம் நிறைவு செய்வதற்கு ரூபா.50,000 நிதியுதவி வழங்கப்பட்டதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நூலகம்**

2015ம் ஆண்டு தொடக்கம் எமது பாடசாலை நூலகத்தினால் ஹென்றிநாதம் எனும் நூல் ஒவ்வொரு வருடமும் வெளியிடப்படுகின்றது. தொடர்ச்சியான நூலக களப் பயணங்கள், பொது நூலக நடமாடும் சேவைகள் வருடா வருடம் எம்மால் முன்னெடுக்கப்படுகின்றன. வாசிப்பு மாதப் போட்டிகளும் அதற்கான பரிசளிப்பு வைபவமும் நடைபெறுகின்றன. 2017,2018ஆம் ஆண்டுகளில் பிரதேச சபையால் நடாத்தப்பட்ட வாசிப்பு மாதப் போட்டிகளில் எமது பாடசாலை மாணவர்களும் பங்குபற்றி பரிசில்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர். 2018ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட சிறந்த (பிரதேசத்திற்குட்பட்ட) நூலகத்திற்காக எமது பாடசாலைக்கு 2ஆம் இடம் கிடைத்துள்ளது.2017ஆம் ஆண்டிற்கான தேசிய வாசிப்பு மாத போட்டியில் 2018இல் சிறப்பு விருதைப் பெற்றுக் கொண்டது. நூலக உதவியாளர் திருமதி உ.காஞ்சனமாலா நூலகப் பொறுப்பாசிரியர் திருமதி A.J நைல்ஸ் ஆகியோருக்கு எனது பாராட்டுக்களையும் நன்றியையும தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இடைத்தொடர்பாடல் அறை** (Interactive room)

தரம் 8-9 மாணவர்களின் இடைத்தொடர்பாடலை வினைத்திறனாக்குவதற்காக 50 வயதைப் பூர்த்தி செய்த பழைய மாணவர்களால் இடைத்தொடர்பாடல் அறை நிர்மாணிக்கப்பட்டது. மாணவரின் அறிவு, திறன் மனப்பாங்கை மேலும் விருத்தி செய்து மாணவன் தனது கல்விச் செயற்பாடுகளில் கருத்தூன்றிக் கவனம் செலுத்த இவ்வறையில் இடம்பெறும் பல்வேறு செயற்பாடுகள் துணைபுரிகின்றன.

## Henrician English Academy

கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களின் ஆங்கில பேச்சாற்றல், எழுத்தற்றல், கிரகித்தல் என்பவற்றை விருத்தியாக்கும் நோக்கில் தரம் 6-9 மாணவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புக்கள் Henrician English Acadamy என்ற பெயரில் உருவாக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றன. "Basic English for the real world" என்ற விருது வாக்கியத்துடன் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இதில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இதன் மூலம் காலைக்கூட்டங்கள், மாணவர் மன்றச் செயற்பாடுகள் என்பவற்றில் மாணவர்களின் துலங்கல்கள், வெளிப்பாடுகளில் முன்னேற்றத்தைக் காண முடிகிறது.

2017இல் English Acadamy விழாவில் பிரதம விருந்தினராக அருட்தந்தை ஜெறாட் அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன் Elocution பரீட்சை, Written, Spoken பரீட்சைகள் வைக்கப்பட்டு சிறந்த புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. Academyயின் இயக்குனரான அருட்தந்தை. T.அன்சன் றெஜிக்குமார் அ.ம.தி அவர்கள் திறம்பட நடத்திக் கொண்டு வருகிறார். அருட்தந்தை **அவர்களுக்கு எனது பாராட்டுடன் கூடிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

## British Council- English

**British Council** நடாத்தும் **"Connecting Classroom"** செயற்திட்டத்தில் வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த இரு பாடசாலைகளில் ஒரு பாடசாலையாக எமது கல்லூரியும் தெரிவு செய்யப்பட்டு 2016/2017 Inetnational School Award இனை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இச்செயற்திட்டத்தின் கீழ் St.Bent's Primary School,London இலிருந்து இரு ஆசிரியர்கள் வருகை தந்திருந்தனர். 2017-2018ல் இத்திட்டத்தின் கீழ் பாடசாலையை வளப்படுத்தும் வளவாளராக செல்வி A.ஜெஸ்லின் ஆசிரியர் அவர்கள் (School Ambassador) ஆக தெரிவு செய்யப்பட்டார். **ஆசிரியர் அவர்களுக்கு எனது பாராட்டுடன் கூடிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

## பாடசாலை விழாக்கள்

2017ம் 2018ம் ஆண்டுகளில் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளுடன் கூடவே முன்னெடுக்கப்பட்ட பாடசாலை வைபவங்கள்.

| | **விழாக்கள்** | **2017** | **2018** |
|---|---|---|---|
| 1 | இல்ல மெய்வல்லுநர் போட்டி | 02.02.2017 | 27.01.2018 |
| 2 | வருடாந்த பரிசளிப்பு விழா | 09.11.2017 | - |
| 3 | கல்லூரித் தினவிழா | 13.07.2017 | 13.07.2018 |
| 4 | அதிபர் தின விழா | 16.08.2017 | 16.05.2018 |
| 6 | ஆசிரியர் தின விழா | 06.10.2017 | 05.10.2018 |
| 7 | வாணி விழா | 30.09.2018 | 19.10.2018 |
| 8 | ஒளி விழா | 07.12.2019 | 29.11.2018 |

## பௌதீகவள விருத்தி 2017/2018

- விளையாட்டு மைதான சுற்றுமதில் அத்திவாரக் கல் நாட்டல்.
- NSBS நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிற்றுண்டிச்சாலை, 2மாடி வகுப்பறை அடிக்கல் நாட்டல்.
- இந்திய அரசின் உதவியுடனான வகுப்பறைக் கட்டிட தொகுதிக்கான அடிக்கல் நாட்டல்.

- பசுமைப் புரட்சி (பிளாஸ்ரிக் பாவனையற்ற பாடசாலை)
- 1987ம் ஆண்டு உயர்தர மாணவர்களினால் திறந்து வைக்கப்பட்டு மாணவர்களின் பாவனைக்காக ஒப்படைக்கப்பட்டது.
- NSBS நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிற்றுண்டிச்சாலை கையேற்பு.

**விசேட வைபவம் 2017/2018**

- Diamond Jubile அருட்தந்தை J.யேசுதாசன் (முன்னாள் கல்லூரி முதல்வர்)
- "உலக சமாதானத்திற்கான மரதன்" உலக கின்னஸ் சாதனையாளரும், பழைய மாணவனுமான திரு.சுரேஸ் ஜோக்கீம் அவர்களின் வரவேற்பு
- Futsal (உதைபந்தாட்டம்)
- இணை ஆயர் பேரருட்கலாநிதி மக்ஸ்வல் சில்வா ஆண்டகை அவர்களின் கல்லூரி தரிசிப்பு
- லியோ கழக அங்குரார்ப்பணம்
- மாணவர் பாராளுமன்ற அங்குரார்ப்பணம்
- யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் ஆயர் பதவியேற்பிற்கான கௌரவிப்பும் கல்லூரி தின விழாவும்
- யாழ் மாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி P.J. ஜெபரட்ணம் அடிகளார் அவர்களால் பாடசாலை இணையத்தள அங்குரார்ப்பணம் (www.henrys.lk)
- கல்லூரி முதல்வர் பதவியேற்பு அருட்தந்தை.E.கொட்விறீ ஜோயெல் அ.ம.தி.

**வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டு**

எமது கல்லூரியானது சகோதரப் பாடசாலையான இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயத்துடன் இணைந்து ஆண்டுதோறும் கண்ணைக் கவருகின்ற இல்ல மெய்வல்லுனர் நிகழ்வை சிறப்புற நடாத்தி வருகின்றமையை பெருமிதத்துடன் குறிப்பிடுவது சாலப் பொருத்தமானதே.

**விளையாட்டுத்துறை**

எமது கல்லூரியில் இருந்து 2018ல் செல்வன் T.அஜித் 19 வயதுப் பிரிவில் தேசிய உதைபந்தாட்ட அணி வீரராகத் தெரிவு செய்யப்பட்டு சர்வதேச மட்டங்களில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. வடமாகாணத்திலிருந்து தேசிய அணிக்குத் தெரிவு செய்யப்பட்ட இவ்வீரர் எமது கல்லூரிக்குத் தேசிய ரீதியில் பெருமையையும் புகழையும் தேடித் தந்துள்ளார்.

**2017, 2018 ல் தேசிய ரீதியில் பங்குபற்றி வெற்றிபெற்றோர்**

எமது கல்லூரியின் விளையாட்டுத்துளையின் ஊடாக வருடாந்தம் தேசிய மட்ட சாதனையாளர்கள் பலரை நாம் உருவாக்குகின்றோம். இச்சாதனையாளர்கள் கற்றலில் பூரண துலங்கலையும், ஒழுக்கம், தலைமைத்துவம், சிறந்த ஆளுமை என்பவற்றைக் கொண்டவர்களாக விளங்குவதுடன் உயர்கல்வித்துறைகளான விளையாட்டு விஞ்ஞானத்துறை, உடற்கல்வி போன்றவற்றிற்கும் ஏனைய துறைகளுக்கான பல்கலைக்கழக அனுமதியையும் பெற்றுக் கொள்கின்றனர் என்பதைப் பெருமையுடன் முன்வைக்கின்றேன்.

**உதைபந்தாட்டம் - 2017**

**20 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணி**

2017ஆம் ஆண்டு 20 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணி தேசிய மட்டத்தில் முதலாவது இடத்தினைப் பெற்றுக் கொண்டது. இதன் அணித்தலைவராக செல்வன்.R.மதுசன் அவர்கள் செயற்பட்டார்.
பங்குபற்றியோர்
S.றூபன்ராஜ், U.அமல்ராஜ், G.அன்ரனிராஜ், B.கனிஸ்ரன், P. சிந்துஜன், A.அதுஜன், T.அஜித், Y. லக்சன், E.கபிஸ்ரன் கவோன், A.அனோஜன், S.யூட்சுபன், P.கிறிசாந், J.டினால்ட், K.கஜேந்திரன்.

**16 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணி**
2017ஆம் ஆண்டு 16 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணி தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது. இதன் அணித்தலைவராக செல்வன் M.பிரசாத் செயற்பட்டார்.
பங்குபற்றியோர்.
G.சதுர்சன், E.டிசாந், A.அருள்யோசப், P.பகலவன், S.சானுயன், S.றிவால்டோ, M.றெஜினோல்ட், J.ஜெயலக்சன், A.ஜினோல்ரன், J.கிருசாந்தன், T.தமிழ்ச்சுடர், P.பையஸ் ஜெனோசன், E.டிலக்சன்.

**இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால்** (Srilanka Football Federation) நடாத்தப்பட்ட போட்டியில் 16 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது. அணித்தலைவராக செல்வன் P.றெக்சன் செயற்பட்டார்.
பங்குபற்றியோர்.
M.பிரசாந், K.சதுர்சன், E.டிசாந், அருள்யோசவ், P.பகலவன், S.சானுஜன், M. றெஜினோல்ட், A.ஜினோல்ரன், T.தமிழ்ச்சுடர், J.கிருசாந்தன், J.துசாந், J.ஜெயலக்சன், K.நிறோஜன், I.இருதயதாஸ், J.சங்கீர்த்தன்,J.டனிஸ்ரன்

**உதைபந்தாட்டம் - 2018**

**இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால்** (Srilanka Football Federation) Division 2 போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட 18 வயதுப் பிரிவின் கீழ் அணியானது Division 1 இற்குத் தெரிவு செய்யப்பட்டமையானது ஒரு வரலாற்றுச் சாதனையாகும் என்பதைப் பெருமிதத்துடன் இங்கே குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.
அணித்தலைவராக செல்வன் P.றெக்சன் செயற்பட்டார்.
பங்குபற்றியோர்
M.பிரசாந், K.சதுர்சன், E.டிசாந், அருள்யோசவ், P.பகலவன், S.சானுஜன், M. றெஜினோல்ட், A.ஜினோல்ரன், T.தமிழ்ச்சுடர், J.கிருசாந்தன், J.துசானந், J.ஜெயலக்சன், S.றெஜினோல்ட் கிளைமன், N.றிவால்டோ், K.நிறோஜன், I.இருதயதாஸ், J.சங்கீர்த்தன்

மேலும் **இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால்** (Srilanka Football Federation) நடாத்தப்பட்ட 12 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணி தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது.
அணித்தலைவராக செல்வன் S.றொய்ஸ்டன் செயற்பட்டார்.
பங்குபற்றியோர்
A.அன்ரனி பசில், U. சாள்ஸ் அன்ரனி, S.தயான் கனறோ, K. தமிழ்ச்செல்வன், S. யோகனன், N. அபினாஸ், A. யுவன் றெக்னோ, R. சியானுசன், M. டினேசகன், S.கடலரசன், S. தனுசன்

அத்துடன் **திருகோணமலை புனித யோசவ் கல்லூரியால் நடாத்தப்பட்ட "Soccer Kings war"** உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிய 18 வயதுப் பிரிவின் கீழ் அணி முதலாவது இடத்தினைப் பெற்றுக் கொண்டது.
அணித்தலைவராக செல்வன் P.றெக்சன் செயற்பட்டார்.
பங்குபற்றியோர்
M.பிரசாந், K.சதுர்சன், E.டிசாந், அருள்யோசவ், P.பகலவன், S.சானுஜன், M. றெஜினோல்ட், A.ஜினோல்ரன், T.தமிழ்ச்சுடர், J.கிருசாந்தன், J.துசானந், J.ஜெயலக்சன், S.றெஜினோல்ட் கிளைமன், N.றிவால்டோ, K.நிறோஜன், I.இருதயதாஸ், J.சங்கீர்த்தன், T.தயாளசீலன், I.டினுசன், A.ஜெறோம், J.தினோஜன்

**உடற்பயிற்சி - 2017**

**உடற்பயிற்சி அணி**

2017ஆம் ஆண்டு உடற்பயிற்சி அணி தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது.இதன் அணித்தலைவராக செல்வன் C.நிலக்ஸ்சன் அவர்கள் செயற்பட்டார்.
பங்குபற்றியோர்
V.எமில்ராஜ்,U.அன்றூ, A.வினோதன், V.ஜோன், I.றஜிந்தன், J.J.சினோவன், I.றம்யன், A.தனுசன், S.அனெக்சன், S.அலெக்சன், P.ரைரஸ், V.கஜினாத், M.றோஜிஸ் அன்ரனி, J.யூட் விஜயராஜ், V.ஜீவராஜ், V.கனிசியஸ், C.நிலக்சன், L.ஜெனக்சன், A.ஜினோல்ரன், K.உமாசங்கர், J.N.பிரவீத், F.A.பிரசன்னா, D.அனஸ்ரன், J.கமிஸ்ரன், C.பிறாஜன் அன்ரோ, P.றெமிசியஸ், R.றொகான், A.மோகன், S.பிரதாப்.

**உடற்பயிற்சி - 2018**

2018ஆம் ஆண்டு உடற்பயிற்சி அணி தேசிய மட்டத்தில் 1ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது. இதன் அணித்தலைவராக செல்வன் S.அனெக்சன் செயற்பட்டார்.
பங்குபற்றியோர்
A.ஜினோல்ரன், U.அன்றூ, A.தனுசன், J.யூட் விஜயராஜ், A.வினோதன், I.றஜிந்தன், S.டினுஜன், J.J.சினோவன், M.றோஜிஸ் அன்ரனி, P.ரைரஸ்,, S.சுதச்செல்வன், S.றஜீபன், K.குணேஸ், R.கசிஸ்றக்சன், T. தனுசன், S.யேசுராஜ், T.டிசான், V.டனிஸ்ரன், I.ஜெனுசன், J.விதுசன், J.கனிஸ்ரன் மதுசன், A.கொன்ஸ்சன்ரைன், G.நிதுசன்,T.மரிய நேரியஸ், R.நிக்சன்,N.லக்கி, G.நிதர்சன்.

**கபடி – 2017**

2017ஆம் ஆண்டு கபடி அணி தேசிய மட்டத்தில் 3ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது. இதன் அணித்தலைவராக செல்வன் A.மோகன் செயற்பட்டார்.
பங்குபற்றியோர்
V.பிரதீபன், S.பிரதாப், J.அன்ரன் டிலக்சன், A.அன்ரன் யோசுவா, E.கபிஸ்ரன் கவோன், A.றூபகன், S.அனெக்சன், U.அன்றூ, A.அதுஜன், S.றூபன்ராஜ், U.அமல்ராஜ்,

## மெய்வல்லுநர் போட்டிகள்

| 2017 | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| கோட்டம் | 18 | 10 | 05 |
| வலயம் | 02 | 07 | 06 |

| 2018 | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| கோட்டம் | 20 | 11 | 04 |

## பெருவிளையாட்டுக்கள்

இச் சாதனைகள் எமது கல்லூரியின் வரலாற்றில் மைற்கற்களாகி தேசியத்தில் கல்லூரியின் பெயரை நிலைநாட்டுகின்றன என்பதை பெருமையுடன் முன்வைக்கின்றேன்.
மேற்படி விளையாட்டுத்துறை தொடர்பாக சகல சாதனைகளுக்கும் பொறுப்பாக இருந்த உப முதல்வர் அருட்தந்தை T. அன்சன் றெஜிக்குமார் அ.ம.தி மற்றும் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் திரு.G.திரோணன் அவர்களுக்கும் மற்றும் பயிற்றுவிப்பாளர்களான ஆசிரியர்கள் திரு.டனிஸ்ரன் விஜயகுமார், திரு.J.B.டனிவோல்ரர், திரு.K.சசிக்குமார், திரு.J.அனுஸ்டதாஸ், மற்றும் உதவிகளை நல்கிய ஆசிரியர்களான திரு.V.வித்தியாபரன், திரு.T.சிவகுமார், திரு.K.செல்வரட்ணம், திரு.K.மணிமாறன், திரு.A.அதிசயராஜா, திரு.V.உதயகுமார் ஆகியோருக்கும் எல்லா வழிகளிலும் கைகொடுத்து உதவுகின்ற எமது கல்லூரியின் பழைய மாணவர்களுக்கும் எமது **நன்றிகளும் பாராட்டுகளும் உரித்தாகுக.**

**ஆசிரியர் கழகம்**

